CFA Institute

# முதலீட்டாளர் உரிமைகள் ஆவணம்

சி.எஃப்.ஏ நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள ‘முதலீட்டாளர்கள் உரிமைகள் ஆவணம்’ நிதித்துறை வல்லுநர்களிடமிருந்து நுகர்வோர்கள் பெறக்கூடிய பல்வேறு சேவைகளுக்கான உரிமைகளை பட்டியலிடுகிறது. நிதிசேவைகள் தொழிற்துறை மீதான நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை நிலைநாட்டுவதற்கு தேவையான அடிப்படை நன்னடத்தை விதிகளை இந்த ஆவணம் தெளிவுபடுத்துகிறது. இந்த ஆவணம், நிதித்துறை பொருட்கள் மற்றும் சேவை முதலீட்டாளர் மேலாண்மை, ஆராய்ச்சி / ஆலோசனைகள், பெர்சனல் பேங்கிங், காப்பீடு மற்றும் கட்டுமானப் பணிக்களுக்கு செல்லுபடியாகும். நீங்கள் ஒரு முதலீட்டுத் திட்டம் போடுகிறீர்கள், புரோக்கருடன் பணியாற்றுகிறீர்கள், வங்கி கணக்கு தொடங்குகிறீர்கள் அல்லது வீடு வாங்குகிறீர்கள் என்றால், இந்த முதலீட்டாளர் உரிமைகள் ஆவணம் உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் உரிய சேவை வழங்குகிறது. **முதலீட்டாளர் உரிமைகளுக்கு நிதித்துறை வல்லுநர்கள் கட்டுப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுவதன் மூலமாக, துறை-வல்லுநர் மற்றும் நிறுவனத்தின் மீதான தங்களது நல்லெண்ணம் மேம்படுகிறது மற்றும் நிதித்துறை முழுவதற்குமான நம்பகத்தன்மை, மரியாதை மற்றும் நேர்மை இதனால் நிலைநிறுத்தப்படுகிறது.**

## நிதித்துறை வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து சேவைகளை நான் பெறும்போது, எனக்கான உரிமைகள்...

1. அமலில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்ட **நேர்மையான**, திறமையான மற்றும் ஒழுக்க விதிகளுக்கு உட்பட்ட நடத்தை;
2. அறிவார்ந்த ஆய்வு, விவேகமான முடிவு மற்றும் கவனமிக்க முயற்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சுதந்திரமான மற்றும் **பாரபட்சமற்ற** அறிவுரை மற்றும் உதவி;
3. நிதித்துறை வல்லுநர் மற்றும் நிறுவனத்தின் தனிப்பட்ட உரிமைகளைக் காட்டிலும் எனது நிதித்துறை **உரிமைகளுக்கு** அதிக முன்னுரிமை;
4. என்னை **பாரபட்சமின்றி** மற்ற வாடிக்கையாளர்களுக்கு இணையாக நடத்துதல்;
5. எனக்கு வழங்கப்படும் சேவைகளில், ஏற்கனவே உள்ள மற்றும் உருவாக வாய்ப்புள்ள **சுயநல முரண்பாடுகளை** முழுமையாக வெளிப்படுத்துதல்;
6. என்னுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளை **புரிந்துகொண்டும்**, எனது நிதிகுறிக்கோள்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு உட்பட்டும், பொருத்தமான அறிவுரைகளை வழங்குதல்;
7. தெளிவான, துல்லியமான, முழுமையான மற்றும் காலத்திற்கேற்ற **தகவல்களை** எளிய மொழிவடிவத்திலும் பயனுள்ள வகையிலும் வழங்குதல்;
8. என்மீது விதிக்கப்படும் **கட்டணங்கள்** மற்றும் செலவினங்களுக்கான விவரங்கள் மற்றும் இந்த செலவினங்கள் நேர்மையானவை மற்றும் அறிவுக்குப் பொருந்தியவை என்பதற்கான விவரங்கள்;
9. எனது கணக்கு வழக்கின் **இரகசியத்தன்மை**;
10. எனது சார்பாக நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு ஆதரவான அனைத்து **ஆவணங்களையும்** உரியமுறையில் பராமரித்தல்.

மேலும் தகவலுக்கு **cfainstitute.org/futurefinance** என்ற இணையதள முகவரியை அணுகவும்

© 2016 CFA Institute. All rights reserved.